# குற்றமுள்ள நெஞ்சு

"பிப்பீங்! பிப்பீங்க்! பிப்பிங்க்!"

சிறுவன் ரமணிக்கு எத்தனை நாழி ஊதலை வைத்துக் கொண்டு ஊதினாலும் அலுக்கவில்லை.

"டேய், ரமணி! சும்மா ஊதி ஊதிக் காதைத் துளைத்துவிடாதே!" என்று பன்முறை அதட்டிய தாயின் கோபத்தைச் சிறிதும் பொருள்படுத்தாத அவன் இளம் உள்ளம், அவனை வாசல் திண்ணைமேல் அமர்ந்து, 'ஊதல்' கச்சேரி செய்யவும் தூண்டியது.

"அப்பா வந்தால் அடிக்கப் போகிறார் பார்!' என்று எச்சரிக்கையாகத் தாய் கூறிய அந்த வார்த்தைகள், தந்தை வெளியிலிருந்து வந்து வீட்டுக்குள் நுழையும்போதுகூட கவனம் வரவில்லை.

ஊதலைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும், ஊதலிலிருந்து வந்து கொண்டிருந்த பலவகை சப்தங்களிலும் இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தான் அவன். அவன் கருத்தெல்லாம் அந்தச் சிறு பண்டத்தின் மீதுதான். ஊதிக் கொண்டேயிருந்தான்.

"டேய் பயலே! வாங்கிவிட்டாயா ஊதலை! காசைக் கரியாக்க நன்றாகத் தெரியும்!" என்று வீட்டுக்குள்ளிருந்து வந்த தந்தையின் குற்றச்சாட்டுத்தான் கடைசியில் அவனுக்கு விழிப்பூட்டியது.

ஊதலை ஊதி ஊதி அவன் அனுபவித்த ஆனந்தம் பாழா? தந்தை அதை உணரவில்லை.

"வாங்கல்லை அப்பா! பலூன் கடைக்காரர் கொடுத்தார்....." என்று தயக்கத்துடனே அவன் சொன்னாலும், தண்டனை ஏதும் கிடைக்காது என்ற தைரியமும் இருந்தது.

"சரி, தொலைந்துபோ, காசைக் கொடுத்து அந்தத் துரும்பை வாங்காமல் இருந்தாயே!' என்று திருப்தியுடன் மொழிந்தது தந்தையின் வாய், அதற்குப்பின் ஊதலைப் பற்றியோ அதைக் கொடுத்தவரைப் பற்றியோ, பேச்சோ நினைப்போ அன்று இருக்கவில்லை.

மறுநாள், இரண்டு பெரிய பலூன்களை ஊதி பெரிதாகி வைத்துக் கயிற்றால் கட்டி, வீட்டுச் சிறிய கூடத்திலே அவற்றைக் கைப்பந்து ஆடிக்கொண்டிருந்தான் ரமணி. தந்தை ஆபீசிலிருந்து வீடு மீளும்பொழுது, பந்தய வீரனைப்போல ஆட்டமே குறியாக இருந்த அவனை, "டேய் ரமணி, இதுவும் கடைக்காரன் தந்ததோ, காசைக் கொடுத்து வாங்கினதோ!" என்று இரைந்து கேட்டான் தந்தையாகிய சந்தானம்.

"கடைக்காரர் கொடுத்ததுதானப்பா! அவருக்கு எம்மேலே ரொம்ப ஆசைப்பா! - அம்மாக்குக் கூட ரெண்டு அலுமினியக் கரண்டி தந்திருக்கார்!" என்று ரமணி தந்தைக்கு பதிலிறுத்தான் கண்களை பலூன்கள் மீது பதித்தவாறே.

"உம்? என்ன?" என்றான் சந்தானம்! "அம்மாவுக்குமா? அப்படின்னா அம்மா மேலே கூட ஆசைதானோ?" என்று தொடர்ந்து கேட்டுவிட வேண்டும்போல்தான் தோன்றியது அவனுக்கு. ஆனால், நல்லவேளை, அந்த அவச் சொல், அவன் நாவிலே வந்துவிடவில்லை. அப்படிச் சொல்லத் தூண்டிய உணர்ச்சிகள் மட்டும் வெளிப்பட்டன அவன் முகத்திலே.

அதே சமயம், சமையலறையிலிருந்து சாவகாசமாக வெளிப்பட்டாள் சரஸ்வதி.

புன்னகையுடன், "அடேயப்பா, பிள்ளையாண்டான் பறக்கிறான் அப்பாவிடம் சமாசாரங்கள் சொல்வதற்கு! அவசர குடுக்கை!" என்று அன்பாக மகனைக் கடிந்து கொண்டுவிட்டு, கணவன் பக்கம் திரும்பினாள் சரஸ்வதி.

"பாருங்கோ, அந்தக் கடைக்காரன் இவனண்டை இரண்டு அலுமினியக் கரண்டிகளைக் கொடுத்தனுப்பினான், மத்தியானம்" என்று அவள் கூறிக்கொண்டிருக்கையிலே,

"அதை உடனே எடுத்து வச்சுண்டுட்டயோல்லியோ?' என்று சீறி விழுந்து இடை மறித்துக் கேட்டான் சந்தானம்!

"அப்பா! அவசரப்படறேளே பிள்ளைக்கு அப்பா நான் தான்னு. கரண்டிகளை ரமணி கொண்டு வந்ததும், விலை தெரியல்லையேன்னு, மறுபடியும் அனுப்பினேன். அதற்கு அவன், 'கரண்டி கருக்காமல் நன்றாயிருக்கான்னு அதை உபயோகப்படுத்தி பார்த்துட்டுச் சொல்லச் சொல்லு! விலை சொல்றேன்!' அப்படின்னு சொல்லியனுப்பினான். நான் நேற்று வாசலிலே அலுமினியக் கரண்டி பேரம் பண்ணி வாங்காமல் விட்டதைப் பார்த்திருக்கான் போலிருக்கு, தானே அனுப்பிச்சிருக்கான் - நாணயமா கருக்காமல் இருந்தால் விலை சொல்றதாகச் சொல்லியிருக்கான்! பாவம் நல்ல நாணயஸ்தனாயிருக்கான்!..... ஆனா இப்படி நாணயமா அசட்டுப் பிசட்டுன்னு வியாபாரம் பண்ணினால், அவனுக்கு என்ன லாபம் இருக்கும்? ரமணிக்கு, ஊதல், பலூன்னு வெறுமனே வேறே கொடுத்துடறானே! ஏனிப்படி செய்யறானோ?" என்று மூச்சுவிடாமல் பேசி நடந்ததையும், தன் அபிப்பிராயத்தையும் கூறி முடித்தாள் சரஸ்வதி

'அழுத்தமான ஆசாமியான சந்தானம் ஒன்றும் பேசவில்லை. அவன் மனது மாத்திரம், 'எனக்கும்தான் தெரியல்லே ஏனிப்படி செய்கிறான் என்று! சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்று திரும்பத் திரும்ப கூறியது.

அதற்கடுத்த நாள் சந்தானம் ரமணியைக் கூட்டிக்கொண்டு, தெருக்கோடியில் எதிர்புறத்திலிருந்த அந்தக் கடைக்குப் போனான். கடைக்காரனைப் பார்த்ததும், சந்தானத்திற்கு ஏனோ தான் நினைப்பதும் செய்வதும் அசட்டுத்தமானவை என்று தோன்றியது. கடைக்காரனின் எளிய உடையும், அடக்கமும் நல்லதனமும் காட்டும் முகமும் செய்கையும் ஒரு நல்ல எண்ணத்தை அவனுக்குப் புகட்டவே நெருங்கின.

ஆனாலும் அவனது உறுதியான எண்ணம் அவ்வளவு லகுவில் முறியுமா?

"ஏனப்பா, கரண்டி இரண்டும் என்ன விலை! கரண்டி நன்னாருக்காம், புழங்கிப் பார்த்தாச்சு!" என்றான் சந்தானம், சிறிது அதிகாரம் தொனிக்கும் குரலிலே!

"இன்னும் இரண்டு நாள் கழிச்சு சொல்லுங்க, அவசரமென்ன?" என்றான் கடைக்காரன்.

சந்தானம் மேலே ஒன்றும் கேட்காமல் வந்துவிட்டான். அன்று மறுநாள் விளக்குக்குத் திரி வாங்குகிற சாக்கிலே போனவன் கரண்டி பணத்தை எடுத்துக் கொடுக்க முற்பட்டான்.

"இருக்கட்டுங்க!" என்று தயக்கத்துடன் கூறிய கடைக்காரனை ஏறிட்டுப் பார்த்தான் சந்தானம்.

'என்னப்பா இது! பணம் வாங்க அவ்வளவு கூச்சம்? அதான் இரண்டு நாள் உபயோகப்படுத்தி பார்த்தாச்சே அதை! அதை உபயோகப்படுத்தி, அது உடைந்தோ வளைந்தோ போனப்புறம்தானா பணம் வாங்கிக்கணும் நீ! நல்லா நாணயம் பார்க்கிறே போ! அதோட உபயோகம் தீர்ந்தப்புறம் பணம் கொடுக்க எங்களுக்கு மனசு வராதே, அது தெரியுமா உனக்கு?" என்று கடைக்காரனை அதட்டும் பாவத்துடன் பேச்சைத் துவக்கிய சந்தானம், ஒரு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு பேச்சை முடித்தான்.

"பரவாயில்லீங்க! அந்தக் கரண்டிகளுக்குப் பணம் வாங்கிக்கணும் என்ற எண்ணத்திலே நான் அதை பையன்கிட்ட கொடுத்தனுப்பலீங்க!" என்றான் கடைக்காரன் பதிலுக்கு ஒரு புன்னகை செய்து.

"நல்லாயிருக்கப்பா உன் வியாபாரம்? எல்லோருக்கும் இப்படித்தானா?" என்று அவன் வாயைக் கிளறினான் சந்தானம்.

"இல்லீங்க! எல்லோருக்கும் இல்லீங்க! உங்களுக்கு மட்டும் தான், இந்த ஒரு விஷயத்திலே இனாம் வியாபாரமுங்க!" என்றான் கடைக்காரன்.

"ஓகோ!' என்றான் சந்தானம். 'ஆனால் இந்தக் கரண்டிகள் நான் உபயோகப்படுத்தும் சாமான்கள் அல்லவே!' என்று கூற துடியாய்த் துடித்தது அவன் நெஞ்சம்.

அப்புறம் இரண்டு மூன்று நாள் ஏதோ சாமான் வாங்கும் சாக்கை வைத்துக்கொண்டு கடைக்குப் போய் வந்தான் சந்தானம். அந்த இரண்டு மூன்று நாளும் கடைக்காரனைப் பற்றி ஏகத்தாளமாகவும், நிஷ்டூரமாகவும், வீட்டில் சமயம் நேர்ந்தபோதெல்லாம் பேசி வந்தான் அவன்.

மூன்றாம் நாள் மாலை கடைக்காரனைப் பார்த்து சந்தானம், "எங்காத்துக்கு ஒரு தடவை வந்து விட்டுப் போயேனப்பா!" என்றான்.

'சந்தோஷமா வரேனுங்க! கடையைக்கூட பூட்டிடலாம் இப்போ!" என்று கூறிவிட்டு அவ்வாறே செய்துவிட்டு அவன் புறப்பட்டும் விட்டான்.

வீடு நெருங்கும்போது கடைக்காரன், "நானும் அம்மாவை பார்க்க வரணுமின்னு நினைச்சிட்டிருந்தேனுங்க!" என்றான். அதை அரைகுறையாகக் காதில் வாங்கிக் கொண்டான் சந்தானம். அவன் மனம் ஏதோ குருட்டாம்போக்கான யோசனைகளிலல்லவா ஈடுபட்டிருந்தது?

"ஏ, சரஸ்வதி! இங்கே வா!" என்று கூவியழைத்தான் மனைவியை, வாசலிலிருந்தே.

"ஏ, சரஸ்வதி, பீ, சரஸ்வதி, ஸீ, சரஸ்வதி, டீ சரஸ்வதி என்று ராகம் போட்டுப் பாடத் தொடங்கிய ரமணியை, "டேய் இரு! அப்பா கூப்பிடறா! என்று அதட்டிவிட்டு என்ன?" என்று கேட்டுக்கொண்டே வாசலுக்கு வந்தாள் சரஸ்வதி.

வாசலில் கணவனுடன் சுவரோரமாக நின்றிருந்த புது மனிதனைக் கவனித்துவிட்டு அவள் கணவனைக் கேள்வி கேட்கும் தோரணையில் ஒரு பார்வை பார்த்தாள்.

"இவர்தான் அந்தக் கடைக்காரர்....." என்று இழுத்தாற்போல அறிமுகம் செய்வித்தான் சந்தானம்.

தலையைச் சிறிது தாழ்த்திக்கொண்டு, ஒடுக்கத்துடன் நின்று கொண்டிருந்த கடைக்காரன் பக்கம் பார்வையைச் செலுத்தினாள் சரஸ்வதி. அதே சமயம் அவனும் தலையை மட்டும் சிறிது நிமிர்த்தி, "என்னைத் தெரியறதுங்களா அம்மா?....... காட்டுப்புத்தூருலே சின்னசாமி...." என்று அவன் சொல்லிக்கொண்டு வரும்போதே சரஸ்வதி பரபரப்புடன் "உம் நீ நடராசுதானே! சின்னசாமி பிள்ளை!" என்று அவனைக்கேட்டு விட்டு கணவன் பக்கம் பார்த்து, 'இவன் எங்க ஊர்க்காரன் தான் கடைசியிலே! பார்த்தேளோன்னோ! இதுவரைக்கும் தெரியாமல் போயிடுத்து!" என்று உத்ஸாகத்துடன் பேசி மறுபடியும் நடராசுவின் பக்கம் திரும்பினாள்!

"என்னப்பா! நீ இன்னும் நினைவு வச்சிருக்கயே என்னை! நீதான் இங்கே கடை வச்சிருக்கேன்னு தெரியவே தெரியாதே! உன் ஆயி, அப்பன், பெண்ஜாதி எல்லாம் சௌக்கியமாப்பா? எல்லோரையும்போல நீயும் கிராமத்தை விட்டுட்டுப் பட்டணம் வந்துட்டயாக்கும்! இங்கே நல்ல வியாபாரம் நடக்குதா?... ஆனா, என்னண்டை நாணயமா நடந்துண்ட மாதிரி எல்லாருக்கும் நாணயமா செய்திண்டிருந்தா, இந்த நாளிலே எங்கே கட்டி வரும்? கலிகாலமில்லே! நல்லதுக்குக் காலமில்லையே!" என்றாள்.

"உங்கப்பாரு எங்களுக்கு செஞ்ச உபகாரத்துக்கு. நாங்க என்னங்க செய்யப்போறோம்! ஐயரு கோவிக்கறாருங்க, கரண்டிங்களுக்கு நான் பணம் வாங்கிக்க இஷ்டப்படலைன்னு! இதுகூட நானு எங்க ஞாபகமா ஒங்களுக்குக் கொடுக்கக்கூடாதுங்களா! எங்கண்ணு முன்னே வளர்ந்த கொழந்தைங்க நீங்க! நீங்க என்னை மறந்திடலாம், நாங்க மறந்திடமாட்டோம்! நீங்களும் எங்க மேலே தயவு வச்சிருக்கணும்னு, என்னமோ என் மனசு திருப்திக்கு அதை அனுப்பினேனுங்க! பெரியய்யா புண்ணியத்துலே எங்க குடும்பம் நிலைச்சு உருவாச்சு! கொறயில்லாம வளர்ந்து வருதுங்க!" என்று கடைக்காரன் உணர்ச்சி ததும்ப பேசினான்.

"அதெல்லாம் கிடக்கட்டுமப்பா! ஏதோ அப்பாவுக்கு உபகாரம் செய்யற மனசு பகவான் கொடுத்திருக்காரு! இப்பவும், இவ்வளவு தள்ளாத வயசிலேயும் அங்கே திண்ணையில் உட்கார்ந்துண்டு, நாலுபேருக்கு நல்லது செய்யத்தான் அவருக்கு ஆசை! ஏதோ செய்யறார்! அது பிரமாதமொண்ணுமில்லே! சித்தே உட்காறேன்! வரேன்!" என்று கூறிவிட்டு உள்ளே போனாள் சரஸ்வதி.

"அம்மாவை தெரியுமாக்கும் உனக்கு! அந்த விஷயம் எனக்குத் தெரியாது! நீ சொல்லலை!" என்றான் சந்தானம், கடக்க்காரனை நோக்கி.

"தெரியுமுங்க! அம்மாவும் என்னை சீக்கிரம் அடையாளம் கண்டு பிடிச்சுட்டாங்க! எனக்கு அது ரொம்ப சந்தோசமாயிருக்குதுங்க!" என்றான் நடராசு.

"நான் உன்னைக் கண்டுபிடிச்சது ஒன்றும் ஆச்சரியமில்லையப்பா! நீ ரொம்ப மாறிடலையே! நான் தான் பாவாடை கட்டியிருந்தவள், மாமியாய் போயிட்டேன்! நீ என்னை மொதல்லே கண்டுபிடிச்சதுதான் ஆச்சர்யம்!" என்று மொழிந்த வண்ணம், கையில் லோட்டா காப்பியுடன் வந்தாள் சரஸ்வதி.

அதை அவனெதிரே கீழே வைத்துக்கொண்டே, "இந்தாப்பா, சூடா காப்பியைக் குடி! நீ குளுகுளுன்னு இளனி வெட்டித் தருவெ! ஜிலுஜிலுன்னு நொங்கு வெட்டிப்போடுவெ! நான் கொடுக்க முடியறது இந்த கொதிக்கும் காப்பிதானப்பா!" என்றாள். அவள் பேச்சிலே சிறுவயதில் கிராமத்திலே அவள் அனுபவித்த இன்பமயமான அனுபவங்களைப்பற்றி அவள் வைத்திருந்த ஏக்கமும், மதிப்பும் வெளிப்பட்டன.

"எல்லாம் மனசுக்குப் பிடிச்சது தானுங்க! உங்களுக்கு இளனியும் நொங்கும் அருமையானா, இது எங்களுக்கு அருமைங்க! அதெல்லாம் குளுகுளுன்னு இருந்தாத்தான் நன்னாயிருக்கும். இது கொதிக்கக் கொதிக்க இருந்தாதான் நன்னாயிருக்குமுங்க!" என்று கூறியவாறே, பபக்தியுடன் லோட்டாவை கையில் எடுத்துக்கொண்டான் நடராசு.

"தேவலையே! எல்லாம் தெரிந்திருக்கே! பட்டணத்து வாசனை சீக்கிரம் அடிச்சுடுத்தே!" என்று கூறி கல கலவென்று சிரித்தாள் சரஸ்வதி.

சுவருக்குப் பின்முறமாகச் சென்று, காப்பியை ஆற்றிக் குடித்துவிட்டு வந்தான் நடராசு. அப்புறம் பழைய நாட்களைப் பற்றியும், அந்த நாட்களைப் பற்றியும் வளைந்து வளைந்து சென்ற பல பேச்சுகளுக்குப்பின், நடராசு, ஒரு தாழ்ந்த கும்பிடு போட்டுவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

"உங்கப்பா என்ன உபகாரம் செஞ்சாராம் அவா குடும்பத்துக்கு!" என்று எடுத்த எடுப்பிலே சரஸ்வதியைப் பார்த்துக் கேட்டான் சந்தானம்.

"அவனோட அப்பா படுத்த படுக்கையாயிருந்தபோது, பணம் ஒண்ணும் வாங்கிக்கொள்ளாமல் நாட்டு வைத்தியம் பண்ணினார். அவனும் பிழைத்தெழுந்தான். இவன் அங்கே பள்ளிக்கூடத்திலே படிக்க ஏதோ ஒத்தாசை பண்ணினார். இன்னும் சில்லரை ஒத்தாசைகள் சிலதும் பண்ணினார். பாவம், ரொம்ப ஏழைக்குடும்பம்! அன்னல் விசுவாசம் நிறைந்த மனசு எல்லோருக்கும். இப்பவும்தான் பாருங்களேன். அவன் அடக்கம், மரியாதை ஒன்றும் குறையல்லை!" என்று நடராசுவைப்பற்றிப் புகழுரையுடன் விவரம் கூறி முடித்தாள் சரஸ்வதி.

உடனே எதையோ நினைத்துக்கொண்டவளாய், அவள், "ஆமாம், நீங்கள் ஏன் அவனை அப்படி கரித்துக் கொட்டினீர்கள் நாலுநாளாய்? அவனப் பார்த்தால், அப்படித் தூற்றிப்பேசும்படியாகவா இருந்தது உங்களுக்கு? நானும் கடைக்காரன் வெறுமனே பலூன், ஊதலெல்லாம் கொடுக்க, அதை வாங்கிக்கிறதாவதுன்னு நினைச்சேன், நடராசுன்னு தெரியல்லே! . . . ஆனா அப்படி கரிச்சு கொட்டும்படி இருக்கா அவன் யார்ன்னு தெரியாவிட்டாலும்?" என்று தானே கேட்டுக்கொள்வதுபோலவும், கணவனை வினவுவதுபோலவும் கேட்டாள்.

"இந்த நாளிலே இப்படி வலுவிலே நல்லது செய்யறாப்போல வருகிறவர்களை நம்பலாமா என்ற பயம்தான் எனக்கு! எப்பவாவது சமயம் பார்த்து வீட்டை கொள்ளை கிள்ளையடித்தால் என்ன செய்யறது என்று எனக்கு பயம்! இனிமேல் அந்த பயமில்லை!" என்றான் சந்தானம் சிரித்துக்கொண்டே.

"நன்னா பயந்தேள்!" என்று செல்லமாகக் கணவனை கடிந்துகொண்டுவிட்டு. "என் குஷியில் அடுப்பை கவனிக்கவே மறந்துட்டேன்! ரமணி என்ன லூட்டியடிக்கிறானோ?" என்று கூறிக்கொண்டே உள்ளே பாய்ந்தாள் சரஸ்வதி.

"சரஸ்வதி, என் குற்றமுள்ள நெஞ்சுதான் அவனைச் சந்தேகித்தது! அவனைக் கரித்துக் கொட்டியது!" என்று எண்ணியவாறேதான் உண்மையை மனைவியிடம் கூற துணிவு பெறாததை நினைத்து வெட்கியவனாக, சாய்வு நாற்காலியில் கண்ணை மூடியவாறு படுத்தான் சந்தானம்.

** ** **

ஏறக்குறைய பத்து வருடங்களுக்கு முன்பு அவன் இருபது, இருபத்தோரு வயதுகொண்ட இளங்காளை. அந்த இளம் வாலிப பருவத்தில் அவனுக்கு ஏற்பட்ட அந்த அனுபவம் எப்படி மறந்துபோய்விடும்?

பலரைப் போல மேற்படிப்புகளில் முனைய வேண்டிய வயதாகி யிருந்தும், அவனுக்குப் பொருளாதார நிலைமை அத்தகைய வசதியளிக்கவில்லை. இப்போது ஒரு பெரிய கம்பெனியில் தலைமை குமாஸ்தாவாக இருக்கும் அவன், அப்போது ஒரு சிறிய கடையில் வேலையில் அமர்ந்திருந்தான். காகிதம், நோட்டுப் புத்தகங்கள், பேனாக்கள் முதலான விற்பனையாகும் அந்தச் சிறு கடையில் அவன்தான், ஸேல்ஸ்மேன், குமாஸ்தா எல்லாம். கடையின் சொந்தக்காரர் மட்டும் வேறு ஒருவர்தான்!

ஒருநாள் பதினைந்து பதினாறு வயது இருக்கக்கூடிய ஒரு இளம் பெண், அவன் கடைக்கு வந்தாள். முதற் சந்திப்பிலேயே சந்தானம் அந்தப் பெண்ணின் அழகையும், வசீகரத் தன்மையையும் வியந்தான். கழுத்துவரை வந்திருந்த தன் புஸ்தகமூட்டையை அலக்காக ஏந்தியவண்ணம், அந்தப்பெண் இன்னும் இரண்டு நோட்டுப் புத்தகங்கள் கேட்டாள். ஒரு உள்ளப் பூரிப்புடன், அவளுக்கு நல்ல புத்தகங்களாகப் பொறுக்கி எடுத்துக் கொடுத்தான் அவன். அவள் தந்த பணத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாமலே பெற்றுக்கொண்டான்.

நான்கைந்து தினங்கள் சென்றன. இரண்டாம் முறையாக அந்தப் பெண் அவன் கடைக்கு வந்தாள். "சார்! இரண்டு நல்ல 'பௌண்டு' நோட்டுப் புத்தகங்கள், நாலாம் நம்பர் ஒரு 'ஸ்வான்' பேனாவும் தாருங்கள்! இதோ ரூபாய்!' என்றாள்.

'இப்போது பேனா இல்லையம்மா! புத்தகமும், பேனாவும் நல்லதாக எடுத்து வைக்கிறேன், சாயங்காலம் வாருங்கள்!" என்று கூறினான் சந்தானம்.

அந்தப் பெண் போய்விட்டாள்.

சாயங்காலம் வந்தது. சந்தானம் கடையை விட்டிறங்கி தெருவில் நின்றுகொண்டு வலதுபுறம் பார்த்தான். அப்படிப் பார்த்தால், பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும் மாணவ மாணவிகளின் சிறு சிறு கும்பல், அங்கே பெரிய வீதியில் செல்வது நன்றாகத் தெரியும். அந்தப் பெண் மறக்காமல் அன்று அந்த பெரிய வீதியிலிருந்து திரும்பி இந்த சின்னத் தெருவுக்கு வரவேண்டுமே என்று அவனது கவலை.

அந்தப் பெண் வந்தாள் நெஞ்சில் கவலையுடன். கையில் புத்தகம் பேனாவுடன் தயாராக நின்று கொண்டிருந்தான் சந்தானம்.

"தயாராக வைத்திருக்கிறீர்களே!' என்று புன்னகையரும்ப கூறிய அந்தப் பெண், அவற்றை வாங்கிக்கொள்ள கையை நீட்டினாள்.

"உங்கள் பெயரென்ன, சொல்லுங்கள், நான் புத்தகத்தின்மீது எழுதித் தந்துவிடுகிறேன்!" என்றான் அவன், அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு.

"வேண்டாம், வேண்டாம்! நானே புதுப் பேனாவால் எழுதிக்கொள்கிறேன்!" என்று அவள் சொல்லவே, அவன் கை, புத்தகத்தையும் பேனாவையும் மேஜை மேலே வைத்துவிட்டது.

"எத்தனை ரூபாய், பில் கொடுங்கள்!" என்றாள் அந்தப் பெண் மேஜை மீதிருந்தவற்றை கையில் எடுத்தவாறு.

"பில்லைப் பற்றி என்ன? நீங்கள் எடுத்துபோங்கள் அவற்றை" பேனா நன்றாக எழுதுகிறதா என்று பரீக்ஷை பாருங்கள், பணம் அப்புறம் வாங்கிக்கொள்கிறேன். பில் கில் எழுதி பணத்தை எடுத்து வைக்க நேரமில்லை, கடையைச் சாத்தணும்!": என்று உறுதியாக சந்தானம் கூறவே, அவள், 'சரி, நாளைக்கே தருகிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சென்றாள். அந்த அழகணங்கு கண் முன் நின்று மறையும் வரை கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அவள் மறைந்த பின், "நாளைக்குப் பொழுது எப்படியிருக்குமோ?" என்று சிந்தனை செய்யத் தொடங்கினான் அவன்.

மறுநாள் என்ன நடந்தது?

அந்தப்பெண் சலனமற்ற முகத்துடன் கடையில் பிரவேசித்தாள். யாரோ இரண்டுபேர் நோட்டுப் புத்தகங்களை நோட்டம் பார்த்துக்கொண்டிருந்ததை ஒரு தடவை கவனித்துவிட்டு, சந்தானத்தை நோக்கி, "சார், நல்ல வேளை என் பணம் மிச்சமாச்சு! பேனா சுத்த மோசம்! புத்தகங்களும் பேனாவுக்குச் சளைத்தவையல்ல! உங்கள் ஜம்பம் என்னிடம் பலிக்கவில்லை! திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் இவற்றை!" என்று முகத்திலறையாத குறையாகக் கூறிவிட்டு, விடுவிடுவென்று அங்கிருந்து போய்விட்டாள்.

மேஜைமீது அவள் போட்டுவிட்ட புத்தகங்களையும் பேனாவையும் எடுத்துக்கொண்டிருந்த சந்தானத்தைப் பார்த்து "எங்கே, அந்த புத்தகங்களைப் பார்க்கிறோம் கொடுங்கள்!" என்றார் அங்கிருந்த இருவரில் ஒருவர்.

"அது 'நல்லதில்லைதான், சார்! நேற்றுதான் புது ஸ்டாக் வந்தது. ரெண்டு நாள் முன் வந்திருக்கவில்லை! அதனால் திருப்பிவிட்டாள்! நீங்கள் புது ஸ்டாக்கையே பாருங்கள்!" என்று சமாதானம் கூறிவிட்டு சந்தானம், அவள் 'தொப்பென போட்ட புத்தகங்களை, கடைக்குள்ளே எடுத்துச் சென்று, 'கப்சிப்' என்று வைத்துவிட்டு வந்தான்.

புத்தகங்களைக் கொண்டு போய் வைத்துக்கொண்டே, மேல்நோக்காக பக்கங்களை புரட்டுவதுபோல பாவனை செய்து, புத்தகத்தினூடே ஒரு கடிதத் துண்டு இருந்ததைக் கண்டுபிடித்திருந்தான் அவன். அதை எடுத்துப் படித்துவிட வேண்டும் என்று அவனுக்கு ஆவேசம். ஆனால் அந்தப் பெண் கூறிப் போன வார்த்தைகளும், அவளுடைய முகபாவமும் "கடிதத்தைப் பார்க்காதே, அவமானப்பட்டுப் போவாய்!' என்று அவனை எண்ணும்படி எச்சரிக்கை செய்தன.

கடைசியில் தனிமை வந்ததும், துணிவையும் வரவழைத்துக் கொண்டு, துண்டுக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

"மணமான பெண்ணான எனக்கு, உமது கடிதமும் செயலும் மிகுந்த அருவருப்பையளிக்கின்றன. பள்ளியில் படிக்கும் என்னைக் கன்னி என்று நீங்கள் நினைக்க நேர்ந்திருக்கலாம். எனினும் தங்கள் துணிச்சல், எடுத்த எடுப்பிலே ஒரு பெண்ணுக்குக் காதற் கடிதம் எழுதத் துணிந்துவிட்ட உங்கள் மனது, இரண்டும் பொல்லாது, துச்சமானது.

"பேனாவை நீங்கள் பரிசாகவும் தரவேண்டாம், வேறெதாகவும் தரவேண்டாம். அந்தப் பேனாவை நான் விலைக்கு வாங்கிக்கொண்டாலும், அது உமக்குக் காதற்கடிதம் எழுதும் கருவியாக முடியாது. என் அத்தானும் கணவருமான வேறொருவருக்குத்தான் காதற் கடிதம் எழுத உபயோகிப்பேன்.... ஆனால் தூய காதலை எங்களிருவரிடையே வளர்க்க, உங்கள் கடையிலிருந்து, உங்கள் மூலமாக வரும் பேனா, எனக்கு வேண்டவே வேண்டாம்!"

பெருமூச்சுடன் கடிதத்தைப் படித்து முடித்த சந்தானத்திற்கு, அந்த மூச்சுடனேயே தன் வாழ்வு முடிந்துவிட்டதுபோல தோன்றியது. ஆனால் உடனே உணர்ந்தான், தன் இன்ப வாழ்வு முடிவு பெற்றதேயன்றி, எஞ்சியிருந்த துன்ப வாழ்வு முடிந்துவிடவில்லையென்று.

அந்த பெருமூச்சுடன் தன் வாழ்வின் இறுதி நிமிஷம் கலந்துவிட்டால் தேவலை போல நினைத்தான்!

"பேனாவுக்கு விலை பெற்றுக்கொள்ளும் நோக்கம் எனக்கு இல்லை! உனக்கு என் அன்பளிப்பாக அது இருக்க விரும்புகிறேன். திருமணம் மூலம் உன்னை அடைய அவாவுருகிறேன். இப்பேனா, நம் இருவரிடையே கடிதப் போக்குவரத்தைத் துவக்கவும் நிலை நிறுத்தவும் இலக்காக இருப்பதைப் பற்றி நான் மகிழ்வது போல நீயும் மகிழ்வாய் என்று எதிர்பார்க்கும்,

**சந்தானம்.**

இந்த வரிகளைத்தான் அவன் எழுதியிருந்தான். அந்த மங்கைக்கு இந்த ஆறு வரிகளும், ஆலகால விஷத்தை உறிஞ்சிக்கொண்டு வந்து, இவன் நெஞ்சிலே, இவனுடைய இன்பத்திலே கக்கி, இளமைப் பூரிப்பும், வாலிபச் செருக்கும், காளை மிடுக்குங் கொண்டிருந்த இவன் உள்ளத்தைப் பொசுக்கிக் கருக்கிவிட்டனவே!

துரோபதையின் சஞ்சல நேத்ரங்களைக் கண்டு எல்லோரும், 'அவள் என்னைக் காதலிக்கிறாள்!' 'அவளுக்கு என் மேலே நாட்டம்தான்!' என்றெல்லாம் நினைத்ததுண்டாம். இவனும் இளமையின் கொந்தளிப்பெல்லாம் நிறைந்த காளைப் பருவத்தினனாயிந்ததால், அப்படியே ஒரு தவறான எண்ணங்கொண்டு அசட்டுத்தனம் செய்துவிட்டான். அவனுடைய அந்தப் பிழையை, அவளால் சுட்டிக் காட்டப்பட்டு உணரும்படி நேரவே, அவன் உடல் ஒடுங்கி, மனம் ஒடுங்கி, புழுப்போல ஒரு தாழ்வு நிலைமையை உணர்ந்தான். இளைஞர் உலகத்திற்கே புறம்பாகவும், பெண்கள் சமுதாயத்திற்கே ஒரு எதிரிபோலவும் தன்னை நிறுத்தியிருப்பதுபோல உடலும் மனமும் சோர்ந்து போனான் சந்தானம்.

காலச்சுழலிலே எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டாலும், அந்த ஆழ்ந்த தழும்பு அவன் மனதிலே இருந்துவிட்டது. அவனுடைய குற்றமுள்ள நெஞ்சு நடராசுவையும் வேவு பார்க்க ஏவியது. விபரீத எண்ணங்கள் அவன் மனதிலே எழுந்து கூத்தாடின.

திருமணப் பெண்ணையும் பிள்ளையையும் பாலிகை அறைக்குள் வைத்துச் சாத்தி வேடிக்கை பார்க்கும் சிறுபிள்ளைத்தனம்தான் சந்தானத்திற்கு இருந்தது. நடராசுவை வீட்டுக்கு அழைத்து வரும்போது! ஆனால் சிறந்த குணங்களின் ஒளிவீச்சிலே, அவன் மன இருள் அகன்றது.

***********

(சுதேசமித்திரன், அக்டோபர் 5, 1947)